**வடமத்திய மாகாண சபை 2023**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வடமத்திய மாகாண சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2024 மே 29 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 19 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடமத்திய மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு / திணைக்களம் கணக்குகளின் பிரகாரம் பூர்த்திசெய்யப்படாத வேலைகளின் பெறுமதி ரூபா 5,959,447,473 ஆக இருந்த போதும் மாகாண சபையின் நிதியக் கணக்கின் குறிப்பு 7.1 இன் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 2,380,490,208 ஆனமையால் ரூபா 3,578,957,265 பூர்த்தி செய்யப்படாத வேலை குறைத்து மாகாண சபை நிதியக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மாகாண சபை நிதிக் கூற்றுக்களுக்காக நடைமுறையல்லாச் சொத்துக்களை உள்ளடக்கும் போது சொத்துக்கள் முகாமைத்துவ மென்பொருள் பயன்படுத்தப்பட்டதுடன் அந்த மென்பொருளில் 2104 செலவினக் குறியீட்டின் கீழ் செலவிடப்பட்ட செலவினம் உள்ளடக்கப்படவில்லை. இது தொடர்பாக | பொதுத்துறை நியமங்களின் பிரகாரம் சொத்துக்களை இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சுற்றிக்கை விநியோகித்து எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | மாகாண அமைச்சுக்கள் / திணைக்களங்களின் கணக்குகளில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்படாத வேலைப் பெறுமதியாக காண்பிக்கப்படுகின்ற ரூபா 5,959,447,473 பெறுமதியில் அடங்கியுள்ள கூட்டுப்பெறுமதி ரூபா 178,507,592 ஆன 40 நிர்மாண செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு உட்படுத்தி அந்தந்த அமைச்சு, திணைக்களங்களுக்கு கையளிக்கப்பட்ட போதும் அந்த சொத்துக்கள் பூர்த்தி செய்யப்படாத வேலை கணக்குகளில் கட்டிடம் மற்றும் நிர்மாண கணக்குகளுக்கு மாற்றப்படாமையின் காரணமக அப்பெறுமானத்தால் கட்டிடம் மற்றும் நிர்மாணப் பெறுமதி குறைத்துக்காண்பிக்கப்பட்டிருந்தது. | பிரதம அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களில் பூர்த்திசெய்யப்படாத வேலை செலவினமாக பதிவழிக்கப்பட்டமையால் இந்தத் தவறு ஏற்பட்டுள்ளது. சகல நிறுவனங்களுக்கும் சுற்றறிக்கையின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுத்துறை நியமங்களின் பிரகாரம் சொத்துக்களை இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | நிதி நிலைமை தொடர்பான கூற்றில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முதலீட்டு வட்டி ரூபா 206,371,837 காண்பிக்கப்பட்ட போதிலும் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் ரூபா 207,816,902 ஆனமையால் ரூபா 1,445,065 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு சரியாக இருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பெறுமதியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வடமத்திய மாகாண திறைசேரியினால் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனுப்பிவைக்கப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப் பணம் முறையே ரூபா 19,542,031 மற்றும் ரூபா 227,811,612 தொகை 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வட மத்திய மாகாண சபை இறுதிக் கணக்கின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாண திறைசேரியின் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விடுவிக்கப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது அதற்குரிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபை நிதியம் தொடர்பாகவுள்ள சகல பொறுப்புக்களும் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற

போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உளள்கக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.5.1 தலைப்பு 600 – ஆளுநர் செயலகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கௌரவ ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மாகாண அரசாங்க சேவையின் வருடாந்த இடமாற்ற நடைமுறையின் பிரகாரம் ஒரு சேவை நிலையமொன்றில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் இடமாற்றப்பட வேண்டியிருந்த போதிலும் இணைந்த சாரதி சேவையில் 52 உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவையின் 24 உத்தியோகத்தர்கள் மற்றும் 14 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆக 90 உத்தியோகத்தர்கள் தொடர்பாக வருடாந்த இடமாற்றக் கொள்கை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டில் வருடாந்த இடமாற்றல் வழங்கும் போது இந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக விசேஷட கவனம் செலுத்தி உரிய சேவை நிறுவனங்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கும், சாரதி சேவையின் இடமாற்றங்கள் தொடர்பாக கௌரவ ஆளுநருடன் விசாரணை செய்து அவரின் தீர்மானம் தொடர்பாக கலந்துரையாடி மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | பணி நடைமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்கத்தின் ஒழுங்குவிதிகளின் கீழ் அல்லாத எந்தவொரு சலுகைக் கட்டண முறைமையும் இன்றி அமுல்படுத்துகின்ற ஒருவில மருத்துவ வீடு வாட்டு தொகுதியை நிர்மாணிப்பதற்காக ஆளுநர் செயலகத்தால் முன்னுரிமை அபிவிருத்தி தேவையுடன் விஷேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2021 இன் கீழ் ரூபா 5,193,756 செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டத்திற்காக அரசாங்கத்தின் நிதி ஏற்பாடு வழங்குதல் எந்த அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டதென தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆளுநருக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. | நிதி ஆணைக்குழு கொள்கையின் இணக்கப்பாடு வழங்கப்பட்ட மாகாண அபிவித்தி திட்டங்களின் செயற்திட்டங்கள் அமுல்படுத்துதல் வேண்டும். |

**1.5.2 தலைப்பு 610 - பிரதம அமைச்சு மற்றும் வடமத்திய மாகாண சட்டம் மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விசேட செயற்திட்டங்கள், சுற்றுலா, கல்வி, தகவல் தொழிநுட்பம், பொறியியல் நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வட மத்திய மாகாண பிரதம அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட நிர்மாண செயற்திட்டங்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது நிறுத்திவைக்கப்பட்ட கூட்டுத்தொகையான ரூபா 100,685,039 ஆன நிறுத்திவைத்தல் பணம் 02 வருடங்கள் கடந்திருக்கும் போது அந்த தொகையில் இருந்து உரிய நிர்மாணங்களின் குறைபாடுகள் காணப்படுமாயின் நல்ல நிலைமைக்கு கொண்டு வருவதற்கோ அல்லது அந்த வைப்புக்களை அரசாங்கத்தின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) பொலன்னறுவை பொது சந்தைக் கட்டிடத் தொகுதியின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்யும் செயற்திட்டம் 2019 ஒக்டோபர் 15 ஆம் திகதி பூர்த்தி செய்து கையளிக்கப்பட்டதுடன் அந்த நிர்மாணங்களில் காணப்பட்ட குறைபாடுகளைக் கவனத்திற் கொள்ளாமல் ரூபா 16,745,178 இறுதி | பராமரிப்புக் காலத்தில் தவறுகள் காணப்படுமாயின் அது தொடர்பாக அறிக்கையிடுமாறு எனது சம இலக்கம் NCP/CM/EDU/08/02/100-2017 மற்றும் 2022.01.20 ஆம் திகதிய கடிதம் மூலம் செயற்திட்ட பொறுப்பு பொறியலாளருக்கு அறிவிக்கப்பட்ட போதும் | நிர்மாணங்களில் காணப்பட்ட குறைபாடுகளை விரைவாக சரிசெய்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்ததுடன் நிறுத்திவைத்தல் பணத்தை பெற்ற பிணை முறியின் காலம் முடிவடைவதற்கு இடமளித்தல் உத்தியோகத்த |

| | | | |
|---|---|---|---|
| | பட்டியல் செலுத்தப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.6 பந்தியின் பிரகாரம் ஒப்பந்தத்திற்காக நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 6,655,599 நிறுத்திவைத்தல் பணம், வணிக வங்கி பிணை முறியின் அடிப்படையில் விடுவிக்கப்பட்ட போதும் செயற்திட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகள் கையில் நிறுத்திவைக்கப்பட்ட காலத்திலும் பூர்த்திசெய்யப்படா திருந்ததுடன் உரிய வங்கி பிணையின் காலமும் காலாவதியாகியிருந்ததன் காரணமாக அந்த பணத்தில் இருந்து குறைபாடுகளை சரிசெய்வதற்கும் தவறியிருந்தது. | அவரினால் நிறுத்திவைத்தல் பணம் விடுவிக்காதிருக்குமாறு பரிந்துரை வழங்கப்படாதிருந்தமையும் தயவுடன் அறியத்தருகின்றோம். இது தொடர்பாக பிரதம அமைச்சின் முன்னாள் பிரதான கணக்காளரின் பங்குபற்றலுடன் 2024.03.08 ஆம் திகதி குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்த பரிந்துரையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ரிடமிருந்து அந்தப் பணம் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | ஹபரண சுற்றுலா தகவல் நிலையத்தில் நிர்மாணத்திற்காக ரூபா 598,013,000 தொகையில் உடன்படிக்கை செய்த கம்பனி செயற்திட்டத்தில் அரைவாசியை பூர்த்தி செய்து ரூபா 369,171,165 கொடுப்பனவைப் பெற்று செயற்திட்டத்தை நிறுத்தி இருந்தது. இந்த செயற் திட்டத்திற்காக ரூபா 119,602,600 வேலை ஆரம்பித்தல் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்ட நிர்மாணம் நிறுத்தப்பட்டு 06 வருடங்களைக் கடந்திருந்த போதும் வழங்கப்பட்ட முற்பணத் தொகையில் மேலும் அறவிட வேண்டியதாக | நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடிகள் மற்றும் கொரோனா தொற்று நோய் நிலைமையின் காரணமாக இதற்காக தேவையான பணம் மத்திய அரசாங்கத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு முடியாமையின் காரணமாக இந்த செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தை பொருண்மையான குறைத்து அல்லது குறைந்த செலவில் மிகுதி எதிர்வரும் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | ஆக்கபூர்வமான செயற்திட்டமாக அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

காணப்பட்ட ரூபா 45,171,484 ஆக இருந்தது. முற்பணத்திற்காக பெறப்பட்ட முற்பண காப்புறுதி பிணை காலாவதியாகி இருந்தது. செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய நிலைமைக்கு உட்படுத்து வதற்கு தவறியதன் காரணமக இதுவரை செலவிடப்பட்ட ரூபா 369,171,165 தொகை பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. ஒப்பந்தகாரர் சமர்ப்பித்த 12 ஆவது உப இடைக்காலப் பட்டியலின் வேலைத் தளத்தில் உள்ள நிர்மாண பொருட்களுக்காக ரூபா 11,611,385 செலுத்தப்பட்டிருந்த போதும் 2023 திசெம்பர் 15 ஆம் திகதி வரையிலும் அவ்வாறான பெறுமதிக்குரிய பொருட்கள் வேலைத்தளத்தில் காணப்படவில்லை.

### 1.5.3 வடமத்திய மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண முகவராண்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | நிறுவனத்தின் தலைவரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1990 இன் 11 ஆம் இலக்க அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண முகவராண்மை ஸ்தாபித்தல் தொடர்பான கொள்கை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் அதன் பணிப்பாளர் சபை அமைச்சரால் சட்ட ரீதியாக நியமிக்கப்பட்ட 03 நபர்களை உள்ளடக்கி இருந்த போதும் அதற்காக மாகாண | 1990 இன் 11 ஆம் இலக்க அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண முகவராண்மை ஸ்தாபித்தல் தொடர்பான விஞ்ஞாபனத்தின் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் மூன்று பேர்களை உள்ளடக்கியது. அதில் தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் மேலும் ஒரு அங்கத்தவர்களை உள்ளடக்கி | விஞ்ஞாபனத்தை திருத்தி பொது முயற்சி கட்டுப்பாட்டிற்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சின் பிரதிநிதி ஒருவர் மற்றும் மாகாண திறைசேரி பிரதிநிதி ஒருவர் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இருந்தது. இந்த மூவரும் விடயப் பொறுப்பு கௌரவ பிரதம அமைச்சரால் கொள்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நியமிக்கப்பட்டிருந்தனர். | |
| (ஆ) | முகவராண்மையின் வாகனங்களை பழுதுபார்த்தல் பிரிவினால் மீளாய்வாண்டிலும் மற்றும் அதற்கு முன்னைய ஆண்டிலும் ரூபா 45,555,467 மேலதிக உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்தல். பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் போட்டிவிலை கோரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வாகனங்கள் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது ஒவ்வொரு மாதிரிகளுக்குமுரிய வாகன வகைகளுக்கு உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்வதற்காக பின்பற்றப்பட வேண்டிய பெறுகை முறைமையொன்று தயாரித்து NCP/DCMA/AD/அ.ம/மி.க/23(254) ஆம் இலக்கத்தின் கீழ் வட மத்திய கௌரவ ஆளுநரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்திற்கு பொருத்தமான பெறுகை திட்ட மொன்றைத் தயாரித்து அங்கீகரித்துக்கொண்டு போட்டி விலைகளின் அடிப்படையில் உதிரிப் பாகங்கள கொள்வனவு செய்யப்படல் வேண்டும். |

**1.5.4 தலைப்பு 611 – உள்ளூராட்சி திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கை செய்தல் ஒப்பந்தகாரர்கள் போலியான செயலாற்றல் பிணை மற்றும் போலியான முற்பண பிணைகள் சமர்ப்பித்து செயலாற்றல் முற்பணம் பெற்று செயற்திட்டத்தை அமுல்படுத்துவதிலிருந்து விலகி இருந்ததன் காரணமாக ரூபா 2,452,328 முற்பணத்தை மீள அறவிடுவதற்கு முடியாதிருந்ததுடன் அந்த போலியான பிணை முறிகள் சமர்ப்பித்த ஒப்பந்தகாரர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதன் மூலம் ஏற்பட்ட நட்டம் தற்போது உரிய உத்தியோகத்தர்க ளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென அறியத்தருவதுடன் அந்த ஒப்பந்தகாரர்களை கறுப்பு பட்டியலில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென மேலும் அறியத்தருகின்றோம். | மாகாண நிதி விதி 433.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 பெப்ரவரி 26 ஆம் திகதிய இலக்கம் 393(1) அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டங்கள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகள் ஹோட்டல்களில் நடத்துவதற்கு இடமளிக்கா திருக்குமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் அதற்கு முரணாக வட மத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தால் 02 செயலமர்வுகள் ஹோட்டல்களில் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,248,850 செலவினம் செய்யப்பட்டிருந்தது. | 60 உத்தியோகத்தர்களுக்கு மேற்பட்ட அளவில் பங்குபற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டமையினாலும் அந்த செயலமர்வு பிரயோக மற்றும் குழு செயற்பாடுகள் சாந்ததாக மேற்கொள்ளப்பட்டமையாலும் ஆகக் குறைந்த கூறுவிலையின் கீழ் நகருக்கு அண்மையில் ஹோட்டல் ஒன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | உள்ளூராட்சித் திணைக்களம் அமுல்படுத்திய இலத்திரனியல் நூலக கட்டிடத்தின் 45 நிர்மாணங்களில் 26 நிர்மாணித்தல் கட்டிடங்கள் நிர்மாணித்தல் கைவிடப்பட்டிருந்தது. இடை நடுவில் நிறுத்தப்பட்ட அந்த செயற்திட்டத்திற்காக ரூபா 21,951,953 மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | முன்னர் நாட்டில் காணப்பட்ட பொருள் பற்றாக்குறை, அதிக அளவில் பொருட்களின் விலைகள் உயர்வடைந்து சென்றமை மற்றும் மோசமான காலநிலை போன்ற விடயங்களின் அடிப்படையில் சில சங்கங்கள் இந்த நடவடிக்கைகளிலிருந்து விலகி இருந்ததுடன் நிதி அமைச்சு விநியோகித்த தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை 03/2022 இன் பிரகாரம் இரு தரப்பினரிடம் இணக்கப்பாட்டில் ஒப்பந்த உடன்படிக்கை முடிவுறுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற் திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | உள்ளூராட்சித் திணைக்களத்தால் பொலன்னறுவை மாவட்டத்தில் ரூபா 83,197,267 செலவினத்தைச் செய்து நிர்மாணிக்கப்பட்ட முழுமையாக வேலை பூர்த்தி செய்யப்பட்ட 16 | குறைபாடுகள் காணப்படுகின்றமையாலும் மற்றும் போதியளவான நிதி ஏற்பாடு நிதியத்தில் காணப்படாமையினாலும் ஏனைய அபிவிருத்தி முன்மொழிவுத் திட்டங்களுக்கான | உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலத்திரனியல் நூலகக் கட்டிடங்கள் அங்கீகரிக்கப்பட்ட பணிகளுக்கு பயன்படுத்தப்படாமல் வேறு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | பொருட்கள் மற்றும் வேலை அல்லது சேவைகள் ஒப்பந்தங்களின் போது உரிய பணிகள் பூர்த்தி செய்து கையளிப்பதற்கு முன்னர் முற்பணம் வழங்கப்படுமாயின் முற்பண பிணை முறி பெற்று மொத்த ஒப்பந்தப் பெறுமதியில் 30 சதவீதம் முற்பணம் செலுத்த முடியுமாக இருந்த போதிலும் உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் 14 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு நிதிகள் இணையவழி ஊடாக கொடுப்பனவு செய்வதற்காக கணனி மென்பொருள் தயாரித்து ஸ்தாபிப்பதற்கான செயற்திட்டம் அவ்வாறான பிணைமுறியின்றி பெறுமதி ரூபா 16,186,800 இனால் 50 சதவீதம் ஆன ரூபா 8,093,400 முற்பணத் தொகை வடமேல் அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. | மாகாண நிதி விதி 146.2 இன் கீழ் விஷேட சந்தர்ப்பங்களின் போது கொடுப்பனவாக அங்கீகரித்து இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இணைய வழி ஊடாக கொடுப்பனவுகளின் செலுத்துதலின் வசதி வடமேல் அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அதை அமுல்படுத்தும் போது வங்கியின் மூலம் ஏற்பட்ட ஏதாவது தாமதத்தின் காரணமாக அதனை அமுல்படுத்துதல் தாமதமடைந்திருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் இணையவழி திட்டத்தில் கொடுப்பனவு முறைமையில் துரிதமாக அமுல்படுத்துதல் வேண்டும். |
| (ஊ) | உள்ளூராட்சி திணைக்களத்தால் சக்கர நாற்காலிகள் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ள பெறுகை செயற்பாடுகளின் போது தகைமை பெற்ற ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த கேள்வி ஆவணங்களின் | ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்தால் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டமையால் இரண்டாவது ஆகக்குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை செயற்பாடுகளின் போது இடம் பெற்ற மோசடிகளை இனங் காண்பதற்காக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |

மாதிரிகளில் உள்ளடக்கப்பட்ட ஆவணங்கள் பெறுகை செயற்பாடுகள் தொடர்பாக ஏதாவது தரப்பினரால் அகற்றப்பட்டு அந்தக் கேள்வி, கேள்வி மதிப்பீட்டு செயற்பாடுகளிலிருந்து நீக்கப்பட்டு அதனை விட ரூபா 256,100 அதிக கூறுவிலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது.

### 1.5.5 தலைப்பு 612 - மாகாண கல்வித் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 மே 24 ஆம் திகதிய இலக்கம் 07/2018 என்ற அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வூதியக் கோவை சரியாக தயாரிக்கப்பட்டு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் பெறுகின்ற திகதி அல்லது அதற்கு பின்னர் ஒரு வாரத்திற்குள் உரிய பிரதேச செயலகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் வட மத்திய மாகாண கல்வி திணைக்களத்தால் 371 ஆசிரியர்களின் ஓய்வூதியக் கோவை அதன் பிரகாரம் குறித்துரைத்த காலத்தில் பிரதேச செயலகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த திகதிகளில் கோவை தயாரித்து சமர்ப்பிபதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அரச நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாகாணக் கல்வித் திணைக்களத்திற்குரிய 816 பாடசாலைகளில் 2023 ஆம் ஆண்டின் போது கோட்ட மற்றும் வலய அலுவலகங்களின் மூலம் 520 பாடசாலைகள் மேற்பார்வை செய்யப்பட் டிருந்ததுடன் அதில் 31 சதவீதமான 165 பாடசாலைகள் தரக் குறிகாட்டிப் பிரிவு அதில் காணப்படவேண்டிய உச்ச அளவிலான மட்டத்தில் ஆன 60 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | வழிகாட்டியின் செயல் முன்னேற்த்தை குறைப்பதில் தொடர்பில் பல்வேறு காரணங்கள் தாக்கமளித்திருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளதுடன் தரக் குறிகாட்டி கணிப்பீடு செய்யப்படாத பாடசாகைளுக்காக மாணவர் செயலாற்றல் இலக்கை அடைந்து கொள்வதற்கு பல்வேறு ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டிருந் ததுடன் தரக் குறிகாட்டி குறைவான பாடசாலைகள் தொடர்பில் பல்வேறு துறைகளுக்கு இடையே அதிக கவனம் செலுத்தப்பட்டமையால் 2024 ஆம் ஆண்டின் போது தர நிலைமையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதம அமைச்சு அமுல்படுத்திய உடன்படிக்கை பெறுமதி ரூபா 35,536,852 ஆன 02 செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் ஒப்பந்ததாரரால் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்ததுடன் அது வரையில் உடன்படிக்கையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் பிணை முறியின் காலாவதியாகியதன் காரணமாக ரூபா 1,777,000 பெறுமதியுடைய 02 செயலாற்றல் பிணை முறிகள் உரிய நிதி நிறுவனங்களுக்கு சமர்ப்பித்து பணமாக்கி | செயலாற்றல் காப்புறுதியை நீடிப்பதற்காக ஒப்பந்தகார நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அந்த நிறுவனத்திற்காக 2017 ஆம் ஆண்டிலும், 2018 ஆம் ஆண்டிலும் செலுத்த வேண்டிய பட்டியல்கள் அமைச்சின் மூலம் செலுத்தப்படாமையினால் அந்த ஒப்பந்தகார நிறுவனங்களுக்கு நிதிக் கஷ்டங்கள் ஏற்பட்டிருந்தமையும் அதனால் உரிய காப்பீட்டை நீடித்துக் கொள்வதற்கான இயலுமை காணப்படாதிருந்ததாக ஆளுநருக்கு அறிவித்து பட்டியல்களைச் செலுத்தும் வரை காப்பீட்டை நீடிக்காதிருக்குமாறு அங்கீகாரம் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்கு தவறியிருந்தது. | பெறப்பட்டிருந்தது. | |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டின் போது பளுகஸ்தமன மகா வித்தியாலயத்திற்காக கேட்போர் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 542,019,300 ஆன தொகை நிர்மாணக் கம்பனியுடன் உடன்படிக்கை செய்து ரூபா 100,000,000 முற்பணத் தொகை ஒப்பந்த காரருக்கு வழங்கப்பட்ட போதும் ஆரம்ப சந்தர்ப்பத்தின் போதே நிர்மாணங்கள் நிறுத்தி செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 100,000,000 முற்பணக் காப்புறுதி காலாவதியாகியிருந்ததுடன் வழங்கப்பட்ட முற்பணத் தொகையை மீள அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியலாளர்) இனால் மாகாண பொறியியல் திணைக்களத்தின் பணிப்பாளர் (கட்டிடம்) தலைமையில் குழுவொன்று 2024.01.10 ஆந் திகதி நியமிக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவின் மூலம் முற்பணத்தை அறவிடல் மற்றும் உடன்படிக்கை புரிந்துணர்வு இணக்கப்பாட்டின் அடிப்படையில் முடிவுறுத்துதல் தொடர்பாக பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து அந்த பரிந்துரையின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 92 மில்லியன் பட்டியல் இதுவரை ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதி ஏற்பாடின்றி உடன்படிக்கை செய்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் நிலுவை முற்பணத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மற்றும் மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 140,596,776 செலவில் அரைவாசி நிர்மாணிக்கப்பட்ட 20 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் அந்த செயற்திட்டத்திற்காக | 2019 ஆம் ஆண்டிலும் 2021 ஆம் ஆண்டிலும் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் 2021 ஆம் ஆண்டின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட பொருதாளார நெருக்கடிகளின் அடிப்படையில் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்த ஒப்பந்தகாரர்களுக்காக தற்போது பொருளாதார நிலைமை நல்ல | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 140,596,776 செலவினம் பயனற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த நிர்மாணங்களில் 06 ஒப்பந்தங்களுக் குரியதாக மேலும் அறவிட வேண்டிய முற்பணங்களின் பெறுமதி ரூபா 36,881,569 ஆகும். | நிலைமைக்கு கொண்டுவரப்பட்டமையினால் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதம அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | தேசிய மட்டத்தில் பாடசாலைகளில் மாணவர்களுக்காக நடாத்தப்படுகின்ற பரீட்சைகளுக்கு தோற்றுகின்ற வடமத்திய மாகாணத்தின் மாணவர்களின் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் பெறுபேறுகளை கட்டியெழுப்புவதற்காக நடவடிக்கைகள் அநேகமாக எடுக்கப்பட்டுள்ளது. விஷேடமாக ஆசிரியர் பற்றாக்குறை இதற்கான பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | பெறுபேறுகளை அதிகரித்துக்கொள்வதற்காக விரைவாக வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| i. | க.பொ.த. (சா.தரம்) பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டு வரை 06 ஆவது இடத்தில் காணப்பட்ட வடமத்திய மாகாணம் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது 09 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டிருந்தது. | | |
| ii. | க.பொ.த. (உ.தரம்) பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது வரை 08 ஆவது இடத்தில் காணப்பட்ட வடமத்திய மாகாணம் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 09 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டிருந்தது. | | |

| | | | |
|---|---|---|---|
| iii. | 2021 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை 05 வருடங்கள் வரை 05 ஆம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையின் போது 100 புள்ளிகளை விட பெற்றுக்கொள்ளல் ஏனைய மாகாணங்களின் பெறுபேறுகளுடன் ஒப்பீடு செய்த போது வடமத்திய மாகாணம் முறையே 5, 6, 6 ஆவது இடத்திற்கு உரித்தாகியிருந்தது. அவ்வாறே 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் சதவீதம் 03 வருடங்களிலும் 50 சதவீதத்தை அடைந்திருக்கவில்லை. | | |
| (எ) | மாகாணக் கல்வித் திணைக்களத்திற்குரிய வலயக் கல்வி அலுவலகங்களில் சிங்கள மொழிப் பாடசாலைகளின் பாடங்களின் பிரகாரம் 3578 ஆசிரிய வெற்றிடங்கள் மற்றும் மிகை 403 உம், தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் பாடங்களின் பிரகாரம் 641 ஆசிரியர் வெற்றிடயங்களும் மற்றும் 128 மிகையும், ஆங்கில மொழிப் பாடசாலைகளில் பாடங்களின் பிரகாரம் 39 ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும் 08 மிகையும் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | வடமத்திய மாகாண ஆசிரியர் குழாத்தை முகாமைத்துவம் செய்து ஆசிரியர் வெற்றிடங்களை குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | கல்வி பதவியணினருக்காக குறித்த காலத்தில் பதவி உயர்வுகள் மற்றும் சம்பள அதிகரிப்புக்களை வழங்குவதற்கு குறித்துரைத்த வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படாமையின் காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற 2,280 ஆசிரியர்களின் நிலுவைச் சம்பளம் ரூபா 120,556,983 மற்றும் 96 ஆசிரியர்களின் நிலுவைப் படிகள் ரூபா 6,575,288 செலுத்த வேண்டியதாகக் காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | குறித்துரைத்த காலத்தில் சம்பள அதிகரிப்புக்கள் மற்றும் பதவி உயர்வுகளை வழங்குவதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | மாகாணக் கல்வித் திணைக்களத்திற்குரிய பாடசாலைகள் பல்வேறு பாடங்களுக்காக ஆசிரியர்களின் வெற்றிடங்கள் காணப்படும் போது 34 ஆசிரியர்கள் 06 மாதங்கள் முதல் 27 வருடங்கள் வரையிலான காலம் ஏனைய வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த விடுவிக்கப்பட்ட 30 ஆசிரியர்களுக்காக விடுவிக்கப்பட்ட திகதியில் இருந்து 2023 திசெம்பர் 31 வரை உரிய உத்தியோகத்தர்கள் சேவைக்கு அறிக்கையிடல், வருகை மற்றும் வெளிச் செல்கை அறிக்கை, விடுமுறை அறிக்கை மற்றும் விடுவிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட படிகள் தொடர்பான அறிக்கைகளை உறுதிப்படுத்தாமல் | தொடர்ச்சியாக சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை பிரதம அமைச்சு செயலாளரின் 2022.12.14 ஆந் திகதிய NCP/CM/EDU/04/01/01 ஆம் இலக்க கடிதம் மூலம் உரிய நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட பதவியணியினர்களுக்கு சம்பளம் செலுத்தும் போது அவர்களின் சேவைக்கான வருகை மற்றும் விடுமுறை விபரங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வலயக் கல்வி அலுவலகத்தினால் சம்பளம் மற்றும் படியாக ரூபா 85,838,643 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஒ) | தாபனவிதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 11.2.3 உப பிரிவின் பிரகாரம் பயிற்சிக் காலத்தில் இருக்கின்ற உத்தியோகத்தர்களின் பயிற்சிக் காலம் முடியும் போது அவர்களை சேவையில் நிரந்தரமாக்குதல் அல்லது அவர்களின் பயிற்சிக் காலத்தை நீடிப்பதற்கோ அல்லது பயிற்சி நியமனங்களை முடிவுறுத்துவதற்கோ திணைக்களத் தலைவர் கண்காணிக்க வேண்டியிருந்த போதிலும் வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் 1990 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆசிரியர் சேவைக்கு நியமிக்கப் படடிருந்த 137 ஆசிரியர்களின் சேவையை நிரந்தரமாக்குவதற்கு 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேவையை நிரந்தரமாக்காத உத்தியோகத்தர்களின் சேவையை நிரந்தரமாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 11.2.3 உப பிரிவின் பிரகாரம் தகுதிகாண் காலத்தில் இருக்கின்ற உத்தியோகத்தர்களின் தகுதிகாண் காலம் முடிவடையும் போது அவர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கோ அல்லது தகுதிகாண் காலத்தை நீடிப்பதற்கோக அல்லது தகுதிகாண் நியமனத்தை முடிவுறுத்துவதற்கோ திணைக்களத்தலைவர் கண்காணித்தல் வேண்டும். |
| (ஓ) | வடமத்திய மாகாணத்தில் 258 பாடசாலைகளுக்குரிய தரம்பெற்ற உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமல் ஆசிரியர் சேவைக்குரிய ஆசிரியர்கள் அதிபர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு | இந்த நிலைமையினைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அதிபர் சேவைக்கு சமமான ஆசிரியர்களுக்காக அதிபர் சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்காக அதிபர் பதவி வழங்கப்படல் வேண்டும். |

பதிற்கடமைப் பதவி வழங்கப்பட்டிருந்த போதும் 397 பாடசாலைகளில் தரம்பெற்ற அதிபர்களில் பிரதி அதிபர் பதவியில் கடமைகளை நிறைவேற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 1.5.6 தலைப்பு 620 - மாகாண விவசாய, விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதார மற்றும் மீன்பிடி அலுவல்கள் அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சுஹுறு நீர்ப்பாசன விவசாய செயற்திட்டத்தின் நிதி ஏற்பாடுகளில் அமுல்படுத்தப்பட்ட நிர்மாணங்கள் உப செயற்திட்டத்தின் கீழ் பெறுமதி ரூபா 16,731,899 இற்கு உடன்படிக்கை செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்குரிய பணிகளை நிறைவேற்றுதல் கைவிடப்பட்டிருந்ததுடன் 03 ஒப்பந்தகாரர்களுக்காக செலுத்தப்பட்டிருந்த வேலை ஆரம்பித்தல் முற்பணம் செய்யப்பட்டிருந்த 03 வேலை ஆரம்பிப்பு முற்பணங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 3,575,068 இனை மீள அறவிடுவதற்கு முடியாதிருந்தது. அந்த ஒப்பந்தத்திற்காக பெறப்பட்ட ரூபா 3,575,068 முற்பண பிணைமுறி மற்றும் ரூபா 462,281 ஆன செயலாற்றல் பிணை முறியின் காலம் முடிவடைவதற்கு முன்னர் பணமாக்கி பெறுகை நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டம் தீர்க்கப் பட்டிருக்கவில்லை. | உரிய ஒப்பந்தகார நிறுவனத்திற்கு முகவரியிட்டு அரச நிதிகளை பயன்படுத்தாமை தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2023.12.06 ஆந் திகதி ரூபா 500,000 தொகை மீளச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய பிரகாரம் மீளச் செலுத்தாதிருக்குமாயின் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.7 தலைப்பு 621 - மாகாண விவசாய திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண விவசாயத் திணைக்களத்தின் விவசாய துறைக்குரிய அங்கீகரிக்கப்பட்ட 68 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு கடந்த 02 வருடங்கள் முழுவதும் வெற்றிடமாகக் காணப்பட்டது. | அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட சேவை கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் சகல ஆட்சேர்ப்புக்களும் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 68 விவசாய உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பும் மேற்கொள்ளப்படவில்லை. | சேவை தேவைகளுக்காக அத்தியவசிய ஆட்சேர்ப்புக்களுக்காக தேவையான அங்கீகாரத்தைப் பெற்று வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும். |

### 1.5.8 தலைப்பு 622 - மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு செவிழி தரகம் கொள்வனவு செய்வதற்கு காணப்பட்ட பெறுகை செயற்பாடுகளின் போது ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த தகைமை பெற்ற நிறுவனத்திற்கு உரிய செவிழி தகரங்களின் உற்பத்தி நிறுவனமாக இருந்ததுடன் அந்த நிறுவனத்தின் ஆகக் குறைந்த விலையான ரூபா 2,116,687 விலை நிராகரிக்கப்பட்டு அந்த உற்பத்தி நிறுவனத்தின் முகவர் விற்பனை நிறுவனம் ஒன்று சமர்ப்பித்த அடுத்துவரும் விலையான ரூபா 2,503,202 இற்கு கேள்வி கையளித்ததன் காரணமாக ரூபா 386,515 நட்டம் ஏற்பட்டிருந்தது. | நியாயமான பதிலளிக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த கேள்விதாரருக்கு கேள்வி கையளித்தல் பெறுகையின் பொறுப்பாகும். அதனால் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்திருந்த போதிலும் நியாயமாக பதில் அளிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வினால் காண்பிக்கப்பட்டுள்ள கேள்வி நிராகரிக்கப்பட்டிருந்தமை அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படாதிருந்தமையையும் அறியத் தருகின்றோம். | தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு மற்றும் பெறுகைக் குழு அங்கத்தவர்களிடமிருந்து நட்டம் அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தின் பிரகாரம் ஒரு சேவைக்காக ரூபா 350 வீதம் கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பசு மருத்துவ பிரிவில் 06 பிரிவுகளில் 2,187 சந்தர்ப்பங்களின் போது ஒரு கருக்கட்டலுக்காக ரூபா 500 முதல் ரூபா 1,000 வரை அறவிடப்பட்டமையால் ரூபா 857,550 மேலதிகமாக விவசாயிக ளிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. | இது தொடர்பாக பரீட்சிப்பதற்கு குழுவொன்று நியமிப்பதற்காக செயலாளர், விவசாய அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதை அறியத் தருகின்றோம். அதன் மூலம் செயற்கை கருக்கட்டலுக்காக விவசாயிகளிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்டமை வெளிப்படுத்தப்படுமாயின் அந்தப் பணத்தை உரிய உத்தியோ கத்தர்களிடமிருந்து மீண்டும் அரசாங்கத்திற்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீரிக்கப்பட்ட கட்டணத்தின் கீழ் உரிய சேவைகள் வழங்கப்படல் வேண்டும். |
| (இ) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தால் மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் ரூபா 6,791,213 செலவில் கால்நடைப் பண்ணை தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்ட போதும் தகவல் முறைமைக்கு தகவல்களை உள்ளடக்கி பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக உரிய செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கால்நடை மருத்துவ அலுவலகங்களின் இருக்கின்ற பதவியணியினர்கள் வரையறுக்கப்பட்டமை யினாலும் இந்த சகல நடவடிக்கைகளும் கால்நடை மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு மேற் கொள்ள வேண்டியிருந்தமையின் காரணமாகவும் செயற்பாடுகள் மெதுவான போக்கில் இருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். |

## 1.5.9 தலைப்பு 631 – மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முழுமையான சிறுநீரக நோய் பரிசோதனைக்குரிய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் விஷேட தரவு தயாரிக்கும் மென்பொருள் (LIS) முறைமை ஸ்தாபிப்பதற்காக சேகரிக்கப்பட்ட ரூபா 3,000,000 ஆன 12 Laptop கணனிகள், 12 அச்சிடல் இயந்திரங்கள் மற்றும் அதற்குரிய 12 துணைப்பாகங்கள் என்பன சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 05 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதும் அந்த தரவு தயாரித்தல் முறைமையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | தரவு தயாரிக்கும் முறைமையை ஸ்தாபித்து சேவைகளை செயற்திற னாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அநுராதபுரம் பிரதேச சுகாதார சேவை அதிகாரப் பிரதேசத்தில் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக இலங்கை திரிப்போஷா கம்பனியிலிருந்து பெறப்பட்ட பெறுமதி ரூபா 26,065,432 ஆன திரிப்போஷாக்களின் பெறுமதி ரூபா 1,094,657 ஆன 30 திரிப்போஷா பக்கற்றுக்கள் வீதம் அடங்கியுள்ள 77 உறைகள் தொலைந்துபோய் இருந்ததுடன் ரூபா 23,497,597 ஆன 30 திரிப்போஷா பக்கற்றுக்கள் அடங்கியளுள்ள 1750 உறைகள் அநுராதபுரம் புகையிரத நிலைய பெட்டிகளில் (Wagon) 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் விடுவிக்கப்படாமல் | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் அது தொடர்பாக காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு வேலைத் திட்டங்களை சரிசெய்து வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுகாதார அமைச்சின் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. புகையிரத பெட்டிகளில் திரிப்போஷா காணப்பட்ட காலத்தில் காணப்பட்ட 45 செல்சியல் வெப்பநிலையில் திரிப்போஷாக்களின் தரத்தன்மை குறைவடையும் ஆபத்து காணப்பட்டது. பெறுமதி ரூபா 26,065,432 ஆன திரிப்போஷா இருப்புக்கள் நலனாளிகளுக்கு பெற்றுக்கொள்வதற்கு காலாவதியாவதற்கு அண்மித்து காணப்பட்டது. இந்த திரிப்போஷா இருப்புக்கள் குறித்துரைத்த காலப்பகுதியில் புகையிரதப் பெட்டிகளில் இருந்து அகற்றப்படாமையினால் தாமதக் கட்டணமாக ரூபா 1,080,000 தொகை புகையிரத திணைக்களத்திற்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | ஆரம்ப சுகாதார சேவை முறைமையை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் அருகிச் செல்லும் குறிகாட்டிகள் (DLI) இலக்கம் 08 இன் பிரகாரம் வயது 35–45 வருடங்களுக்கு இடையே மொத்த பெண்களின் சனத்தொகையை மேவுகை செய்யும் வகையில் கருப்பை புற்றுநோய் பரீட்சிக்கப் படவேண்டியிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டில் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்கள் 15 இல் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 35-45 வயதிற்கு இடையிலான மொத்த சனத்தொகையில் கருப்பை புற்றுநோய் பரீட்சிக்கப்பட்டிருந்த சதவீதத்தின் வீச்சு 05-36 சதவீதம் ஆகும். அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் அருகிச் செல்லும் | இந்த செயற்திட்டத்தின் கருப்பை செயற்பாட்டு குறிகாட்டிக்கான செயற்பாடுகளை ஒழுங்கு முறையாக மேற்கொள்ளப்படுவதை அறியத்தருகின்றோம். | ஆரம்ப சுகாதார சேவைகளை வலுப்படுத்தும் செயற்திட்டத்தில் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிகாட்டிகள் (DLI) இலக்கம் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டமையால் செயற்திட்டத்தின் இலக்கிடப்பட்ட நோக்கங்களை பூர்த்தி செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | மாகாண சுகாதார திணைக்களத்தால் குருதி மாதிரிகளைப் பரீட்சிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,315,250 பெறுமதியான 42 Serum Creatinine Pack காலாவதியாவதற்கு அண்மித்ததன் அடிப்படையில் 2020 ஏப்ரல் 29 ஆந் திகதி வழங்குநர் நிறுவனத்திற்கு மீள அனுப்பப்பட்டிருந்தது.<br>கணக்காய்வுத் திகதியான 2024 மார்ச் 07 ஆம் திகதி வரையில் 05 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதும் அந்த இரசாயன உபகரணப் பொருட்களுக்காக வழங்கிய நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட தொகை அல்லது புதிய 42 Serum Creatinine Pack அளவினைப் பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அநுராதபுர மத்திய இரசாயன ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் கீழ் மட்டத்தில் காணப்பட்டமையினால் காலாவதியாகுவதற்கு அண்மித்திருந்த 42 Serum Creatinine Pack மீள அனுப்பப்பட்டிருந்தது.<br>அதன் பின்னர் அந்த Pack இற்காக தேவையான பிரகாரம் அந்த நிறுவனத்தால் தற்போது ஒரு பகுதி வழங்கப்பட்டிருந்தது. மிகுதி அளவினை தேவையான பிரகாரம் கோரி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையின் பிரகாரம் விரைவாக பெற்று வைத்தியசாலை சேவைகளுக்காக வழங்குதல் வேண்டும். |
| (உ) | இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப முகவராண்மை வழிகாட்டியின் அடிப்படையில் மாகாண சுகாதார சேவை திணைக்களத்தில் தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் வெளி நோயாளர் பிரிவுகளை வலைப்பின்னல் படுத்தும் தொழில்நுட்ப செயற்திட்டம் அநுராதபுர மாவட்டத்தில் அமுல்படுத்துவதற்காக 2012 ஆம் ஆண்டின் போது 02 பிரதேச | வரிசை அமைச்சின் கோரிக்கை, வழிகாட்டல் மற்றும் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் இந்த தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளின் வெளி நோயாளர் பிரிவை வலைப்பின்னல்படுத்தும் தொழில்நுட்ப செயற்திட்டம் அநுராதபுரம் மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டின் போது மற்றும் 2019 ஆம் ஆண்டின் போதும் அமுல்படுத்தப்பட்டிருந்த போதும் சரியான | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைத்தியசாலைகளுக்கு பெறுமதி ரூபா 5,574,780 ஆன கணனி துணைப்பாகங்களும் 2018 ஆம் ஆண்டின் போது மேலும் 03 தள வைத்தியசாலைகளுக்கு கூட்டுப்பெறுமதி ரூபா 3,107,897 ஆன கணனித் துணைப்பாகங்களும் ஆக கூட்டுப்பெறுமதி ரூபா 8,682,677 ஆன உபகரணங்கள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டதன் காரணமாக செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | சாத்தியவள ஆய்வு இன்றி அந்த நிறுவனங்களில் அமுல்படுத்தப்பட்டமையினால் நடைமுறையில் காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகளின் அடிப்படையில் இந்த செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற முடியாதிருந்தமையை ஏற்றுக்கொள்கின்றோம். | |
| (ஊ) | தமுத்தேகம தளவைத்தியசாலைக்காக லெப்பரஸ்கொப்பி (Laparoscopy) இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு 2022, 2023 ஆம் ஆண்டுகளின் போது நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும் இந்த இயந்திரத்தைக் கொள்வனவு செய்தல் 2024 யூன் 30 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக நோயாளர் சத்திர சிகிச்சை சேவைகளின் செயலாற்றலை உயர்த்துவதற்கு முடியாதிருந்த சந்தர்ப்பங்கள் அதன் மூலம் இழக்கப்பட்டிருந்து. | இந்த இயந்திரத்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக்குழு பரிந்துரை செய்த இயந்திரத்தின் விலை, கேள்வி சமர்ப்பித்த ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரரின் விலையினை விட போதியளவில் அதிகரித்த பெறுமதியின் காரணமாக ஆளுநரின் ஆலோசனையின் பிரகாரம் இயந்திரத்தை கொள்வனவு செய்தல் கைவிடப்பட்டு மீண்டும் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்தது. | உரிய இயந்திரத்தை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.10 தலைப்பு 632 – மாகாண ஆயுர்வேத திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்குரிய பரப்பளவு 30.55 ஏக்கர் ஆன 13 மூலிகைத் தோட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படாமையினால் வருடாந்தம் உலர்ந்த மருந்துகளின் தேவை 95 சதவீதம் வெளி வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | வட மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற மூலிகைத் தோட்டங்களில் மருந்து உற்பத்திக்கு மூலப் பொருட்களை வழங்கும் ஒரே நோக்கமாக இல்லாதிருந்ததுடன் மருந்துகள் தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு தேவையான கல்விசார் அறிவினை வழங்குவதன் மூலம் நலிவடைந்து செல்லும் மருந்துகளைப் பாதுகாப்பது தொடர்பில் சமூகத்தின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளல் வேண்டும். | மூலிகைத் தோட்டங்களை ஸ்தாபிக்கும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அநுராதபுரம் மாகாண ஆயுர்வேத வைத்தியசாலை வெளிவாரி நோயாளர் பிரிவில் சிகிச்சைக்காக மாற்று வழி மருந்துகள் காணப்படாமை அத்தியவசிய பூர்த்தி செய்யப்பட்ட மருந்து அளவின் பிகாரம கொள்வனவு செய்யாமையின் காரணமாக மீளாய்வாண்டில் மாற்று வழிகள் காணப்படாதிருந்த அத்தியவசிய 05 மருந்து வகைகள் மீளாய்வாண்டில் 05 நாட்கள் முதல் 14 நாட்கள் வரையான காலத்தில் மாத்திரம் நோயாளிகளுக்கு அந்த மருந்துகள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மருந்துகளில் எந்தவொரு தினத்தின் போது | 2023 ஆம் ஆண்டின் போது உடனடியாக உலர்ந்த மருந்துகள் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட மருந்துகளின் விலைகள் மிகவும் விரைவாக உயர்வடைந்து சென்றதுடன் அதன் மூலம் அத்தியாவசிய தேவைகளில் அரைவாசி அளவே கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது. | தேவையான மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. 2023 ஆம் ஆண்டில் மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 90 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதும் அதில் பூர்த்தி செய்யப்பட்ட மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 43 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | | |

**1.5.11 தலைப்பு 634 - சமூக சேவைகள் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் காணப்படுகின்ற பெறுமதி ரூபா 2,833,013 ஆன ஹெக்கிராவ ஒழுக்கரந்த விஷேட தேவையுடன் உள்ள நபர்களை பாதுகாக்கும் நிலையம் 2020 பெப்ரவரி 08 ஆம் திகதி முதல் கணக்காய்வுத் திகதியான 2024 பெப்ரவரி 10 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கெக்கிராவ ஒழுக்கரத விஷேட பயிற்சி நிலையத்திற்காக ‘‘சவித்மா’’ என்ற பெயரில் செயற்திட்ட அறிக்கை சுகாதார அமைச்சு செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக மீண்டும் கவனம் செலுத்தி மிகவும் விரைவாக பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உத்தேசித்த செயற்திட்டங்களை விரைவாக அமுல்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் பாதுகாக்கப்படுகின்ற ஊனமுற்ற நவர்களை பயிற்சியளிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 06 மில்லியன்களை விஞ்சிய கிரித்தலே அத்வெல பயிற்சி நிலையம் 08 வருடங்கள் அளவிலான காலத்திலிருந்து பயனற்றுக் காணப்பட்டது. | இந்த நிறுவனம் எதிர்காலத்தின் போது செலுத்தும் வசதிகளுடன் முதியோர் இல்லமொன்றாக பேணிச்செல்வதற்கு தேவையான முன்மொழிவுகள் சமர்ப்பித்து சுகாதார அமைச்சு செயலாளருடன் கலந்துரையாடப் பட்டிருந்ததுடன் அதனை மிகவும் விரைவாக ஆக்கபூர்வமானதாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படல் வேண்டும். |

**1.5.12 தலைப்பு 640 - மாகாண கூட்டுறவு, வியாபார மற்றும் உணவு, போக்குவரத்து, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 43 மில்லியன் உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் வடமத்திய மாகாண கூட்டுறவுத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த தொகையில் வ/ப அநுராபுர மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2021 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 33 மில்லியன் கடன் தொகையில் 2024 பெப்ரவரி 26 ஆம் திகதி வரையிலும் ரூபா 27.65 மில்லியன் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த சங்கங்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் பணம் அறவிடாமையின் காரணமாக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் கடன் வழங்கும் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு மிகுதி பணம் ரூபா 15.35 மில்லியன் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டதன் காரணமாக மேற் கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமான ‘‘திறந்த சந்தையில் அரிசி பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுத்தல் மற்றும் அரிசி விலையினை கட்டுப்படுத்துதல்’’ என்ற நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் குறித்துரைத்த காலத்தின் போது அந்த பணம் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட வில்லை. தற்போது இந்த அரிசி கூட்டுறவு சங்கங்களின் செயற்படு நிலையில் காணப்படு வதுடன் அவர்களின் கையிலுள்ள பணங்களை உரிய நெல்லை கொள்வனவு செய்யும் செயற்பாடுகள் இடையூறு இன்றி மேற்கொள்ளப்படுவதுடன் திணைக்களத்தால் வழங்கப்படாத பணம் ஒட்டுமொத்த அரிசி பற்றாக்குறை அல்லது விலைக் கட்டுப்பாடு என்ற விடயங்களுக்கான தாக்கங்கள் ஏற்படவில்லை. | தொடர்ச்சியான கடன் நிகழ்ச்சித்திட்டம் சுழற்சிக் கடன் நிகழ்ச்சித்திட்டம் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படல். |

### 1.5.13 கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நிதியம்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுறவு சேவை கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் உத்தேச திட்டத்திற்குரிய மீளாய்வாண்டு மற்றும் கடந்த இரண்டு வருடங்களுக்கு உரியதாக செலுத்த வேண்டிய ஓய்வூதியம் உரிய காலத்தில் செலுத்தப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 27,223,075 செலுத்த வேண்டியிருந்தது. | ஓய்வூதியம் செலுத்துவதற்கான போதியளவான பிரகாரம் பணம் கிடைக்கப் பெறாதிருந்தமையால் ஒழுங்குமுறையாக மாதாந்த ஓய்வூதியம் செலுத்துவதற்கு முடியாதிருந்தது. | உத்தேசத் திட்டத்தில் காணப்படுகின்ற இணக்கப்பாட்டின் பிரகாரம் நலனாளிகளுக்கு செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய கணக்கிற்குரிய 2011 முதல் 2021 வரையான காலத்தில் வைப்புப் செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1,888,739 ஆன 82 காசோலைகள் தேறாதிருந்ததுடன் அது தொடர்பான தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்கு நடவடிக்கைகள் தாமதமடைந்ததன் காரணமாக இனங்காண முடியாதிருந்தது. விரைவாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கிக்கு வைப்புச் செய்யப்படுகின்ற காசோலைகள் தொடர்பாக தொடர்ச்சியாக கவனம் செலுத்தி அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.14 வடமத்திய மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | நிறுவனத்தின் தலைவரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கெக்கிராவ பேரூந்து நிலையத்தில் 15 கடைகள் மாதாந்த வாடகை மதிப்பீட்டு திணைக்களத்தால் 2023 யூன் மாதத்தில் மதிப்பீடு செய்து வழங்கப்பட்டிருந்த போதும் அந்த மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் மாதாந்த வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரை மாதமொன்றுக்கு ரூபா 129,000 வீதம் அந்த 12 கடைகளிலும் ரூபா | 09 கடை உரிமையாளர்கள் மதிப்பீட்டுத் திணைக்களத்தால் சமர்ப்பிக்கும் புதிய மதிப்பீடு செய்யப்பட்ட தொகை வாடகையாக வழங்குவதை நிராகரித்திருந்தது. அது தொடர்பாக அவர்களால் கௌரவ ஆளுநருக்கு வாடகையைத் | அதிகார சபைக்குரிய கடை வாடகை வருமானத்தை உறுதிப்படுத்துவதற்காக வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 774,000 வருமானம் அதிகாரசபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | தொகையைத் திருத்தி சலுகை வழங்குமாறு கோரப்பட்டிருந்தது. புதிய வாடகை உடன்படிக்கையைப் பெற்றுக்கொள்ளும் போது பொதுவான வாடகை ஒன்றைத் தீர்மானிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.5.15 தலைப்பு 641 – மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2009 இன் 05 ஆம் இலக்க கூட்டுறவு விஞ்ஞாபனத்தின் 58(3) பிரிவின் பிரகாரம் பிணக்குகள் தீர்ப்பவர்களின் பாதிக்கப்பட்ட தரப்பினரால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் சமர்ப்பிக்கப் பட்டிருந்த 61 முறைப்பாடுகளில் 07 முறைப்பாடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 52 முறைப்பாடுகள் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த முறைப்பாடுகள் தொடர்பாக முறைப்பாட்டாளர்களினால் ரூபா 1,703,482 தொகையும் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | விடயங்களை சமர்ப்பித்தல் ஒழுங்கு முறையின் பிரகாரம் முறைப்பாடுகள் விசாரணை செய்யப்படுவதுடன் 2024.12.31 ஆம் திகதி வரையில் இந்த முறைப்பாடுகளை விசாரணை செய்தலைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம். | கூட்டுறவு அபிவிருத்தி விஞ்ஞாபனத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) வட மத்திய மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட 723 கூட்டுறவுச் சங்கங்களின் 373 கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் செயலிழந்த கூட்டுறவு சங்கங்கள் தொடர்பாக 2009 இன் 05 ஆம் இலக்க வடமத்திய | செயற்பாடற்ற கூட்டுறவுச் சங்கங்களின் விஞ்ஞாபனத்தின் 50 ஆவது பிரிவின் பிரகாரம் பொறுப்பாளர்களினால் பொறுப்பாளர்களை நியமிப்பத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 120 சங்கங்களுக்குரிய | விஞ்ஞாபனத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை உறுதிப்படுத்தி பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாகாண கூட்டுறவு விஞ்ஞாபனத்தின் XI ஆம் அத்தியாயத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தகவல்கள் இந்த அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அதன் பின்னர் இந்த கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பாக கூட்டுறவுச் சங்க விஞ்ஞாபனத்தின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (இ) | 2009 இன் 05 ஆம் இலக்க வடமத்திய மாகாண கூட்டுறவு விஞ்ஞாபனத்தின் 44 ஆவது பிரிவின் பிரகாரம் சகல பதிவு செய்யப்பட்ட சங்கங்களினாலும் தமது சங்கங்களின் நிதிக் கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 03 மாதங்களுக்குள் பதிவாளர் அல்லது அவர்களினால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறு தரப்பினருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அநுராதபுரம் மாவட்டத்தில் 62 கூட்டுறவுச் சங்கங்களின் 105 கணக்குகள் 2024 பெப்ரவரி 29 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்காக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே அநுராதபுரம் மாவட்டத்தில் 45 சனச சங்கங்களிலிருந்து 66 கணக்குகள் மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தில் 17 சணச கூட்டுறவு சங்கங்களுக்குரிய 39 கணக்குகளின் தகவல்கள் உரிய சங்க பொறுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த கணக்குகள் கூடிய விரைவில் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | விஞ்ஞாபனத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கூட்டுறவு பதிவாளருக்கு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட 22 கூட்டுறவுச் சங்கங்களில் 25 கணக்குகள் 2024 பெப்ரவரி 29 ஆம் திகதி வரையும் கணக்காய்வு ஆரம்பிக்கப்படாதிருந்த துடன் 49 சங்கங்களின் 57 கணக்குகள் கணக்காய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது உரிய கணக்குகளை பரீட்சிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் குறைபாடுகளுக்குரிய உரிய சங்கங்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விரைவாக கணக்காய்வைப் பூர்த்தி செய்து அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திற்குரிய 1997 முதல் 2022 வரையான காலத்தில் வைப்புச் செயயப்பட்ட பெறுமதி ரூபா 1,468,669 ஆன 71 காசோலைகள் தேறியிருக்கவில்லை. | இந்த நிதியம் வங்கி இணக்கக்கூற்று தாமதம் அடைந்து தயாரிக்கப்பட்டமையினால் அது வைப்புச் செய்யப்பட்ட போதிலும் தேறாதிருந்த காசோலைகளை இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. எதிர்காலத்தில் காசோலைகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கிக்கு வைப்புச் செய்யப்படுகின்ற காசோலைகள் தொடர்பாக தொடச்சியாக கவனம் செலுத்தி அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | 2021 ஆம் ஆண்டில் விஷேட அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 6,550,843 செலவில் நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டு உரிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு கையளிக்கப்பட் 05 கூட்டுறவுச் சங்கங்களுக்குரிய 05 கட்டிடங்கள் கணக்காய்வுத் திகதியான 2023.02.14 வரையிலும் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் விளைவற்று இருப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுதல் வேண்டும். |

## 1.5.16 தலைப்பு 642 - மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------- | ------------------------------ | ------------------------------ |
| (அ) | மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமாகக் காணப்பட்ட கடைகள் மற்றும் 27 வியாபார கொட்டகைகள் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா | கடை உரிமையாளர்களால் வாடகை செலுத்துதல் வசதியீனமாக இருந்ததாக அறிவித்து கௌரவ ஆளுநருக்கு முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை நாளதுவரையாக்கி விரைவாக நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,760,861 நிலுவைக் கடை வாடகை மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதி வரையில் 10 கடைகள் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்தது. | | |
| (ஆ) | மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் விற்பனை கட்டிடத் தொகுதிக்குரிய கடைகள் மற்றும் 11 விற்பனைக் கொட்டகைகள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலம் மூடப்பட்டிருந்தது. | தற்போது விளைவற்றுக் காணப்படுகின்ற கடைகளை கேள்வி மூலம் ஏனைய வாடகையாளர் களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆர்வம் காண்பிக்கன்ற தரப்பினருக்கு கடைகள் வாடகைக்கு வழங்கப்படல் வேண்டும். |
| (இ) | மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள செலஸ்திமடு தச்சிப் பயிற்சிப் பாடசாலையின் விடுதிக்கூடம் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 2,941,275 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இந்த ஆண்டில் இருந்து இதுவரை எந்தவொரு விடுதி வசதிகளும் வழங்கப்படாதிருந்தமையால் அது பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2023 ஆம் ஆண்டில் பயிற்சி பயிலுநர்கள் சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் அந்த ஆண்டில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் காணரமாக பயிற்சி பயிலுநர்கள் வருகை தராதிருந்ததுடன் தற்போது பரதேச செயலகம் ஊடாக பிரிவு மட்டத்தில் அறிவிக்கப்பட்டு புதிய பயிலுநர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.17 மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | நிறுவனத்தின் தலைவரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மரதன்கடவல நிறைவேற்று பொறியியலாளர் அலுவலக வளவில் நிர்மாணிக்கப்பட்ட இயந்திரப் பிரிவில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமல் நிறுத்தப்பட்டதன் காரணமாக நிர்மாணங்கள் மற்றும் | ஆளுநருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் தீர்மானத்தின் பிரகாரம் அமுல்படுத்த முடியாதிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட ரூபா 6,041,838 செலவினம் பயனற்றதாக இருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது, கடந்த ஆண்டுகளின் போது வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக கொள்வனவு ரூபா 5,782,812 பெறுமதியுடைய மூலப்பொருட்கள் வேலைத் தளங்கள் சார்ந்த பகுதிகளில் 01 - 03 வருடங்களுக்கு இடையிலான கால வீச்சில் பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப் பட்டிருந்ததுடன் ரூபா 274,403 பெறுமதியுடைய மூலப்பொருட்கள் தொலைந்து போய் இருந்ததுடன் ரூபா 1,758,951 பெறுமதியுடைய மூலப்பொருட்கள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத வகையில் அழிவடைந்து காணப்பட்டது. | இது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் குறித்த மற்றும் போதியளவில் இல்லாதிருந்தமையால் பதிலளித்தல் வசதியீனமாக இருந்தது. | வீதி பராமரிப்புகளுக்காக மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல், பயன்படுத்துதல் மற்றும் கணக்கீடு செய்தல் தொடர்பாக வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று ஏற்படுத்தப்படல் வேண்டும். |

### 1.5.18 தலைப்பு 651 - மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் குளங்களை மறுசீரமைக்கும் போது அதற்கு தேவையான மண் மற்றும் கிறவலை போக்குவரத்துச் செய்வதற்கு உரிய வேலைத்தளங்கள் மற்றும் மண் பெறப்படுகின்ற இடங்களாக மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த தூர அளவில் கொடுப்பனவு செய்யும் போது அதிகரித்து காண்பித்து மேலதிக வேலையாக செலுத்துதலாக தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 02 குளங்களுக்காக ரூபா | கிறவல் குழிகள் வேலைத்தளங்களுக்கு அண்மையில் நிர்மாணங்கள் மேற்கொள்கின்ற காலப்பகுதியின் போது கண்டறிவதற்கு முடியாதிருந்தமையால் கிலோ மீற்றர் 30-60 தூரத்தில் கிறவல் படிவுகள் காணப்பட்டமை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பொறியியலாளரால் விலைப் பகுப்பாய்வு அறிக்கையில் பரிந்துரை | ஆரம்ப மதிப்பீட்டின் போது கிறவல் பெறப்படுகின்ற இடங்கள் குறித்துரைத்த ரீதியில் இனங்கண்டு போட்டியாளர் விலைகள் பெற்றுக்கொள்ளும் நலன்கள் மாகாண சபை நிதியத்திற்கு பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 612,620 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | செய்யப்பட்டிருந்தது. | |
| (ஆ) | மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் குளங்கள் மற்றும் 03 ஏனைய நிர்மாணங்களுக்குரிய தாக செலுத்தும் போது பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நிறைவேற்றப்படாத வேலைப் பகுதிகளுக்காக ரூபா 1,143,636 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | பெறப்பட்ட அளவிடை களின் பிரகாரம் இறுதிப்பட்டியல் பெறுமதி செலுத்தப்பட்டுள்ளது. | பிழையான அளவிடையின் மேற்கொள்ளப்பட்ட மேலதிக கொடுப்பனவுகள் உரிய தரப்பினரிடமிருந்து வழங்கிய உத்தியோ கத்தர்களிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | குளம் மறுசீரமைக்கும் போது குளக் கட்டுகள், குள அணைகள் மற்றும் நிர்மாண இடங்களில் காணப்படுகின்ற நிர்மாணங்களுக்கு இடையூறான பெறுமதியுடனான மரங்கள் பல்வேறு முறையான அங்கீகாரத்துடன் மரக் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்க வேண்யிருந்த போதிலும் 04 குளங்களை மறுசீரமைக்கும் போது அவ்வாறு அகற்றப்பட்ட பெறுமதியான 168 மரங்கள் முறையான பிரகாரம் மரக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கோ அல்லது அவற்றை சட்டரீதியான முறையில் பயன்படுத்தக்கூடிய ஏனைய பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டமைக்கான சான்றுகளோ காணப்படவில்லை. | அகற்றுவதற்கு ஏற்படுகின்ற மரங்களுக்காக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. | அகற்றப்பட்ட மரங்களை முறையான பிரகாரம் அகற்றுவதற்காக தேவையான ஆலோசனை மற்றும் சுற்றறிக்கை மூலம் உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.19 தலைப்பு 652 – மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வட மத்திய மாகாணத்தின் 24 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய நீண்டகால அனுமதிப்பத்திரத்திற்குரிய 2,474 நீண்டகால அனுமதிப்பத்திர உரிமையாளர்களிடம் இருந்து நீண்டகால காணி அனுமதிப்பத்திரம் கட்டணம் ரூபா 398,069,896 நிலுவையாகக் காணப்பட்டதுடன் வாடகை செலுத்துதலை புறக்கணித்த நபர்கள் தொடர்பாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது சட்ட ரீதியான நடவடிக்கைகள் 18 நபர்களுக்காக மாத்திரமே எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திடம் காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு விரைவான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | காணி பணிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்கத்தின் காணிகள் குடியிருப்பு மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்காக நீண்டகால ரீதியில் வாடகை அடிப்படையில் வழங்கும் போது காணப்படுகின்ற செயற்திற இன்மைகள் மற்றும் | நீண்டகால வாடகை கோவைகளை நாளதுவரையாக்குவதற்காக விரைவான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுகின்றது. | காணிகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் வாடகை பணத்தை அதிகரிப்பதற்காக போதியளவான கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தாமதங்களின் காரணமாக மாகாண சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப் பட்டிருந்தது. இது தொடர்பாக அநுராதபுர மாவட்டத்தின் 11 பிரதேச செயலாளர்கள் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைப் பிரகாரம் மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட 621 கோவைகள், அளவிடை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நில அளவையாளருக்கு அனுப்பப்பட்ட 04 கோவைகள் மற்றும் இறுதி அங்கீகாரத்திற்காக காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப் பட்ட 568 கோவைகளாக 1193 கோவைகளுக்காக அங்கீகாரத்தைப் பெறல் 02 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரை தாமதமடைந்திருந்தது. | | |

**1.5.20 தலைப்பு - 660 பிரதம செயலகம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆரம்ப விசாரணைகளை நடாத்துவதற்காக கட்டளையிடப்பட்ட அதிகார தரப்பினரால் அந்தந்த சம்பவங்களின் தன்மையைக் கவனத்திற் கொண்டு சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப அந்த விசாரணைகள் இவ்வளவு காலத்தை உள்ளடக்கி பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது என | ஆரம்ப விசாரணைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு ஆலோசனை வழங்கி சகல அமைச்சு செயலாளர்கள் / திணைக்களத் தலைவர்களுக்கு முகவரியிட்டு சுற்றறிக்கைக் கடிதம் விநியோகிக்கப்பட்டள்ளது. | தாபனவிதிக்கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII அத்தியாயத்தின் 13.2 ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த காலத்தில் விசாரணைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்க வேண்டியிருந்த போதிலும் மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் 07 திணைக்களங்களில் நடைபெற்ற 117 ஆரம்ப விசாரணைகளுக்காக குறித்தகாலம் வழங்கப்படாதிருந்தமையின் காரணமாக அந்த ஆரம்ப விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பித்து 06 மாதங்களுக்கும் 08 வருடங்களுக்கும் இடையிலான காலம் கடந்திருந்த போதும் அவை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுச் சான்றிதழ் பிரகாரம் வட மத்திய மாகாண சபைக்குரிய 19 வாகனங்கள் மற்றும் 10 மோட்டார் சைக்கிள்கள் தொலைந்துபோய் இருந்தன. | இருப்பை உறுதிப்படுத்த முடியாக வாகனங்கள் தொடர்பாக உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பதில் கிடைத்த பின்னர் கணக்காய்விற்கு அறிவிக்கப்படும். | மாகாண சபையின் பேரில் பதிவு செய்யப்பட்டுள்ள எனினும் பௌதீக ரீதியில் காணப்படாத வாகனங்கள் தொடர்பாக முறையான விசாரணை மேற்கொண்டு தொலைந்து போன வாகனங்களை இனங்காண்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.21 தலைப்பு 661 - மாகாண திறைசேரி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண நிதி விதி 259.2 மற்றும் 259.3 இன் பிரகாரம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு / திணைக்களங்களின் கட்டுநிதியில் அடுத்துவரும் ஆண்டின் சனவரி 10 ஆம் திகதியில் அல்லது மாகாண திறைசேரியினால் குறித்துரைக்கப்படுகின்ற திகதியில் மீண்டும் தீர்க்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 அமைச்சுக்களினால் தீர்த்து வைக்கப்படாத 10-16 வருடங்களுக்கிடையிலான காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற கட்டுநிதி மீதியின் கூட்டுமொத்தம் ரூபா 27,478,709 ஆகும். | பிரதம அமைச்சிற்குரிய ரூபா 26,405,861 தொகை தொடர்பாக பொது ஆதனங்கள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மாகாண விவசாய அமைச்சிற்குரிய ரூபா 1,072,848 மீதி ஒப்பந்தகாரர்களினால் வேலை செய்வதற்கு முடியாதிருந்த வேலைகள் கைவிடப்பட்டிருந்தமையினால் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | மாகாண நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.22 தலைப்பு 663 - மாகாண பொறியியலாளர் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 05 மில்லியனுக்கு குறைந்த மற்றும் ஒப்பந்த காலம் 03 மாதங்களுக்கு குறைந்த நிர்மாண ஒப்பந்தங்களுக்காக விலை தளம்பல்களை செலுத்துவதற்கு இடமளிக்க முடியாதிருந்த போதிலும் உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 4,705,162 ஆன ஒப்பந்த காலம் 03 மாதங்களுக்கு குறைந்த பொறிவில மருத்துவ வீட்டு விடுதிக்கூடும் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 835,581 விலை முரண்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டத்திற்காக கொடுப்பனவு | தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அளவிடைகளில் வழுக்களின் காரணமாக சீமெந்து இடுவதற்காக இரு தடவை கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டுள்ள நிறுத்திவைத்தல் பணத்தில் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கெக்கிராவ பிரதேச பொறியியலாளருக்கு ஆலோசனை | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| செய்யும் போது நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக பிழையான அளவிடை அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ரூபா 403,629 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டுள்ளது. |

### 1.5.23 தலைப்பு 665 - மாகாண இறைவரித் திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள காணிகளில் இருந்து கனிப் பொருட்களை அகழுகின்ற நபர்களினால் செலுத்த வேண்டிய கனிப்பொருள் வரியை அறவிடுவதற்காக மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு சொந்தமான 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது செயலில் உள்ள 90 வரிக்கோவைகளில் அளவு காணப்பட்டதுடன் கனிப்பொருள் அகழ்வு தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்கும் உரித்து உள்ள புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக வடமத்திய மாகாணத்தின் கருங்கல் அகழ்விற்காக கனிப்பொருள் அகழ்விற்காக 813 கனிப்பொருள் அகழ்வு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. | தகவல்கள் கோரப்பட்ட போதும் இதுவரை தகவல்கள் கிடைத்திருக்கவில்லை. எதிர்காலத்தில் அந்த தகவல்களை பெற்று மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கனிப்பொருள் வரி அறவிடுவதற்காக கனிப்பொருள் ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களின் தரவுகள் அடிப்படையாகக் கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | அநுராதபுர மாவட்டத்தின் செயற்பாட்டில் உள்ள 78 கனிப்பொருள் வரிக் கோவைகளுக்கிடையே 25 சதவீதம் தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் | புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தில் பதிவு செய்யும் போது 2022 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்த தகவல்களில் அடங்கியுள்ள | கனிப்பொருள் வரி அறவிடுவதற்காக கனிப்பொருள் ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களின் தரவுகள் அடிப்படையாகக் |

| | | | |
|---|---|---|---|
| | அந்த கோவைகளில் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் அரசிறை அறவிடப்பட்ட கியூப் அளவு 20 சதவீதத்திற்கு குறைவான அளவிற்காக மாத்திரம் மாகாண இறைவரி திணைக்களத்தால் கனிப்பொருள் வரி அறவிடப்பட்டிருந்தது. | அளவுகளுக்கிடையே ஏவதாவது இணக்கமின்மைகள் காணப்பட்டிருந்தமையை அறியத்தருகின்றோம். புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் தகவல்களின் பிரகாரம் அரசிறை அறவிடப்பட்டுள்ள கோவைகளில் அறவிடப்பட வேண்டிய வரித்தொகையில் 70 சதவீதம் தற்போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிகுதி 30 சதவீதத்தை அறவிடும் நடவடிக்கைகள் 2024.06.30 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம். | கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தால் பொலன்னறுவை மாவட்டத்தில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மணல் அகழ்விற்காக 159 அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப் பட்டிருந்ததுடன் மணல் அகழ்விற்கான அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு ஒரு கம்பனி மாத்திரம் மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு மணல் அகழ்விற்காக கனிப்பொருள் வரி செலுத்தியிருந்தது. அதன் பிரகாரம் மணல் அகழ்விற்காக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அனுமதிப்பத்திரம் பெற்ற 158 அனுமதிப்பத்திர நலனாளிகளிடமிருந்து அந்த காலத்திற்குரிய ரூபா 8,324,612 கனிப்பொருள் வரி மாகாண இறைவரித் திணைக்களத்தால் | 2022 ஆம் ஆண்டிற்குரிய கனிப் பொருள் அகற்விற்காக 189 அனுமதிப்பத்திரங்களும் 2023 ஆம் ஆண்டிற்காக 152 அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளது. அந்த அனுமதிப்பத்திரங்கள் யாவும் ஜீஏ.எஸ்எம்பீடெக்னிக்கல் சேர்விஸ் (தனியார்) கம்பனியாக இருந்ததுடன் அந்த கம்பனிக்காக திணைக்களத்திற்கு கோவைகள் காணப்பட்டது. அதன் மூலம் வரி அறவிடுதல் மேற்கொள்ளப்படும். | புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் மூலம் விநியோகிக்கப் பட்ட அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட அளவிற்கு வரி அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மாகாண இறைவரித் திணைக்களத்தின் மாகாண இறைவரி சேவையின் மதிப்பீட்டாளர் மற்றும் சிரேஷ்ட மதிப்பீட்டாளர் பதவிகள் நிறைவேற்றுத் தரத்தின் III/II ஆக உள்ளடக்கும் வகையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் பதவிகளை அங்கீகரித்திருக்கும் போது அதற்கு முரணாக மதிப்பீட்டாளர் மற்றும் சிரேஷ்ட மதிப்பீட்டாளர் பதவிகள் II/1 ஆக உள்ளடக்கி மாகாண இறைவரி சேவை பிரமாணங்கள் அங்கீகரித்து அமுல்படுத்தியதன் காரணமாக மதிப்பீட்டாளர் பதவியில் 04 பதவிகளுக்கு 2015 ஏப்ரல் முதல் 2022 செப்டெம்பர் வரை ரூபா 2,639,652 மேலதிக சம்பளம் மற்றும் படியாக செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |